முழுப் பதிப்புரிமையுடையது

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA1 பரீட்சை – 2016 யூலை

## (AA13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்

(Economics for Business and Accounting)

2016–07–23
பிற்பகல்
[1.45 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட நேரம் :*** *வாசித்தல் - 15 நிமிடங்கள்*
*எழுதுதல் - 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***

பக்கங்கள் : 07
வினாக்கள் : 06

(3) ***விடைகள்*** *யாவும் தரப்பட்ட விடைப் புத்தகத்தில் பரீட்சைக்கு விண்ணப்பித்த ஒரே மொழியில் மட்டும் எழுதப்படல் வேண்டும்.*

(4) *எல்லா செயன்முறைகள் மற்றும் கணிப்புகளை சமர்ப்பிக்கவும். ஏதாவது எடுகோள்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுக.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) *வரைபுத் தாள்கள் வழங்கப்படும்.*

(7) ***செயல்முறை விளக்க வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் ஒரு வினைச் சொல் உள்ளடங்கியிருக்கிறது. (OTQ's தவிர்ந்த). பரீட்சார்த்திகள் செயல்முறை விளக்கப் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(8) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இருபது (20) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல.* ***1.1*** *முதல்* ***1.10*** *வரையுள்ள வினாக்களுக்காக நீங்கள் தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உங்களது விடைப்புத்தகத்தில் வினாவுக்குத் தரப்பட்ட இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** பின்வருவனவற்றுள் “பொருளாதார வளம் ஒன்றின் (an economic resource) ஓர் அம்சமாக அமைவது எது?

(1) இயற்கையினால் தரப்பட்ட ஒரு வளம்

(2) சந்தர்ப்பச் செலவொன்றைக் (opportunity cost) கொண்டுள்ள ஒரு வளம்

(3) நிரம்பலில் மிகையாகவுள்ள ஒரு வளம்

(4) அரச துறையினால் (public sector) மட்டுமே நிரம்பல் செய்யக்கூடிய ஒரு வளம்

**1.2** "குறைந்து செல்லும் எல்லைப்பயன்" என்பதனால் கருதப்படுவது யாது?

(1) நபர் ஒருவர் தரப்பட்ட பண்டமொன்றை அதிகமதிகமாக நுகரும்போது அப்பண்டத்தின் எல்லைப் பயனானது முடிவில் வீழ்ச்சியடைகிறது.

(2) நபர் ஒருவர் தரப்பட்ட பண்டமொன்றை அதிகமதிகமாக நுகரும்போது ஏனைய பண்டங்களின் எல்லைப்பயனானது முடிவில் வீழ்ச்சியடைகிறது.

(3) நபர் ஒருவர் தரப்பட்ட பண்டமொன்றை அதிகமதிகமாக நுகரும்போது பண்டத்தின் மொத்தப் பயனானது மாறாதிருக்கிறது.

(4) நபர் ஒருவர் தரப்பட்ட பண்டமொன்றைக் குறைவாக நுகரும்போது அப்பண்டத்தின் எல்லைப் பயன் முடிவில் வீழ்ச்சியடைகிறது.

**1.3** குறிப்பிட்ட பொருளொன்றின் விலையானது ரூ.16/- இலிருந்து ரூ.20/- இற்கு உயர அப்பொருளின் கேள்விக் கணியம் (quantity demanded) 80 அலகுகளிலிருந்து 60 அலகுகளுக்கு வீழ்ச்சியடைகிறது. அப்பொருளின் கேள்வியின் விலை நெகிழ்ச்சி (Price elasticity of demand),

(1) 0.75 (2) 1.0 (3) 0.8 (4) 1.25

**1.4** அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் நிலவுவதற்குக் காரணம்,

(1) வருமானத்தின் அதிகரிப்புடன் நுகர்வும் அதிகரிக்கின்றமை.

(2) பொருளாதார வளங்களின் இடமாற்றப்படா நிலை (non-transferability).

(3) எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு வளங்கள் போதாதிருக்கின்றமை.

(4) மேலேயுள்ள யாவும்.

**1.5** பின்வருவனவற்றுள் நேரில் வரிகளின் ஒரு பிரதிகூலமாக அமைவது எது?

(1) வரியைச் செலுத்துகின்ற நபர் சுமையைத் தாங்குகின்றமை

(2) சேகரிப்பதற்கு அரசாங்கத்திற்கு இலகுவாக இருத்தல்

(3) வரிச் சுமையின் பகிர்வில் உள்ள சமத்துவமின்மை

(4) வரி ஏய்ப்புச் செய்ய முடியாது

**1.6** இலங்கை மத்திய வங்கியின் ஒரு தொழிற்பாடு **அல்லாதது** பின்வருவனவற்றுள் எது?

(1) பொருளாதார மற்றும் விலை ஸ்திரத்தன்மை (stability)

(2) பொதுக் கடன் (Public debt) முகாமைத்துவம்

(3) வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்

(4) பொதுமக்களிடமிருந்து வைப்புகளை ஏற்றுக்கொள்ளல்

**1.7** 2015 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைக்கிணங்க, 2015 ஆம் ஆண்டிற்கான பொருளாதார வளர்ச்சி வீதமானது,

(1) 8% (2) 7.5% (3) 6.2% (4) 4.8%

**1.8** மொத்தத் தேசிய வருமானம் (Gross National Income) கணிக்கப்படும் விதமாவது,

(1) மொத்த உள்நாட்டு வருமானம் + வெளிநாட்டிலிருந்து பெற்ற தேறிய காரணி வருமானம்

(2) மொத்த உள்நாட்டு வருமானம் + மானியங்கள் – வருமான வரி – பகிரப்படாத வியாபார இலாபங்கள்

(3) தனிநபர் வருமானம் + வருமான வரி + பகிரப்படாத வியாபார இலாபங்கள்

(4) காரணி வருமானம் – மானியங்கள் + வருமான வரி + சேமிப்புகள்

**1.9** ''திறந்த பொருளாதாரம்'' என்பதனாற் கருதப்படுவது யாது?

(1) உலகின் பிற பகுதிகளுடன் இணைந்தியங்காத பொருளாதாரம்.

(2) உலகின் பிற பகுதிகளுடன் இணைந்தியங்கும் பொருளாதாரம்.

(3) அரசாங்கம், ஏற்றுமதிகளுக்கு அல்லாது இறக்குமதிகளுக்குக் கட்டுப்பாடுகளை விதித்துள்ள பொருளாதாரம்.

(4) சந்தைத் திசைமுகப்படுத்தல் (Market – Orientation) இல்லாத பொருளாதாரம்.

**1.10** இலங்கை மத்திய வங்கியின் பணக் கொள்கையின் (Monetary policy) ஒரு பண்புத்தரக் கட்டுப்பாடு (qualitative control) பின்வருபவற்றுள் எது?

(1) நயவிணக்கம் (Moral Suasion)

(2) தாராள சந்தை நடவடிக்கைகள் (Open Market Operations)

(3) நியதிச்சட்ட ஒதுக்க வீதம் (Statutory Reserve Ratio)

(4) வங்கி வீதக் கொள்கை (Bank Rate Policy)

*பின்வரும் **1.11** முதல் **1.15** வரையிலான கூற்றுக்கள் ஒவ்வொன்றும் "**சரியா**" அல்லது "**தவறா**" என்பதைக் குறிப்பிடுக. தெரிவு செய்த விடையை (சரியா / தவறா) அதன் வினாவுக்குரிய இலக்கத்துடன் உமது விடைத்தாளில் எழுதுக.*

**1.11** நிறைபோட்டிச் சந்தையின் கீழ், பண்டமொன்றின் தனி வழங்குநர் (single supplier) ஒருவர் இருக்கின்றார்.

**1.12** எல்லைச் செலவு (MC) வளையியானது சராசரிச் செலவு வளையியை (Average Cost curve) அதன் இழிவுப் புள்ளியில் (minimum point) இடைவெட்டுகிறது.

**1.13** அளவுத்திட்டத்திற்கு திரும்பல்கள் அதிகரித்தல் (Increasing returns to scale) என்பதன் கருத்தாவது, தரப்பட்டதொரு விகிதத்தில், உற்பத்திக் காரணிகள் அனைத்தும் அதிகரிக்கின்றபோது சரியாக அதே விகிதத்தில், உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடும் அதிகரிக்கும் என்பதாகும்.

**1.14** ஒரு நிதி இடையீட்டாளர் (financial intermediary) என்பவர் தரப்பட்டதொரு வட்டி வீதத்தில் கடன் வழங்குநரிடமிருந்து (Lender) வைப்புகளைக் கவர்ந்து, அவற்றை கடன் வாங்குவோருக்கு (borrowers) உயர்ந்த வட்டி வீதமொன்றில் மீள வழங்குவதன் மூலம் கடன் வழங்குநரை கடன் வாங்குபவரோடு இணைக்கின்ற ஒரு நிறுவனமாக இருக்கின்றார்.

**1.15** நிறுவனமொன்றின் கிரயமானது பிரதானமாக, நிலையான கிரயம் (fixed cost) மாறுங் கிரயம் (variable cost) ஆகிய இருவகை கிரயங்களையும் உள்ளடக்குகின்றது.

*வினா இல. **1.16** முதல் **1.20** வரையிலான வினாக்களின் இடைவெளிகளை நிரப்புவதற்கு, அடைப்புக்குள் தரப்பட்டிருக்கும் சொல் / சொற்களைத் தெரிவுசெய்க. நீங்கள் தெரிவுசெய்த சொல் / சொற்களை உமது விடைப் புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.16** பண்டமொன்றினது நிரம்பல் வளையி இடப்பக்கமாக இடம்பெயர்கையில் கேள்வி வளையியில் மாற்றமேதும் நிகழாதபோது, பண்டத்தின் சமநிலை விலையானது (equilibrium price) ....................... *(அதிகரிக்கின்றது / குறைகின்றது)*.

**1.17** பொருட்களினதும் சேவைகளினதும் விலைகள் அதிகரிக்கின்றபோது பணத்தின் பெறுமதி ....................... *(உயரும் / வீழ்ச்சியடையும்)*.

**1.18** மொத்த உள்நாட்டு உற்பத்தியை (GDP) அளவிடுவதற்கு நடப்பு ஆண்டு சந்தை விலைகள் பயன் படுத்தப்படும்போது அது ....................... *(பெயரளவு GDP / மெய் GDP)* எனப்படுகிறது.

**1.19** ....................... *(குறுகிய பண நிரம்பல் ($M_1$) / பணவியல் அடிப்படை)* என்பது பொதுமக்கள் வைத்திருக்கின்ற நாணயத்தின் கூட்டுமொத்தத்தினையும் (aggregate of the currency) பொது மக்களால் வணிக வங்கிகளில் வைக்கப்பட்டிருக்கும் கேள்வி வைப்புகளையும் குறிக்கிறது.

**1.20** ....................... *(விசால பணப் பெருக்கி (Broad Money Multiplier) / விசால பண நிரம்பல் [$M_2$])* என்பது குறுகிய பணநிரம்பலின் கூட்டுமொத்தத்தினையும் (aggregate of Narrow Money Supply) பொதுமக்களால் வணிக வங்கிகளில் வைக்கப்பட்டுள்ள கால மற்றும் சேமிப்பு வைப்புகளையும் குறிக்கின்றது.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

(a) (i) இலங்கையில் நீங்கள் காணக்கூடிய பொருளாதார முறைமையின் வகையைக் **கூறுக.** (01 புள்ளி)

(ii) மேலே (i) இல் குறிப்பிட்ட பொருளாதார முறைமையைக் கொண்டிருப்பதற்கான காரணங்கள் மூன்றனைக் (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) பொருளாதாரமொன்றிலுள்ள அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

(a) (i) "ஒட்டுமொத்த அரசாங்கப் பாதீட்டின் பற்றாக்குறை" என்பதனால் கருதப்படுவதை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(ii) அரசாங்கப் பாதீட்டுப் பற்றாக்குறைக்கான நிதியீட்டல் மூலங்கள் (sources) மூன்றினைக் (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) அரச துறை முயற்சிகளின் (Public Enterprises) அனுகூலங்கள் நான்கினைக் (04) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 04

(a) பணத்தின் தொழிற்பாடுகள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) வணிக வங்கியொன்றின் பிரதான தொழிற்பாடுகள் நான்கினைக் (04) **கூறுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 05

(a) சர்வதேச வர்த்தகத்துடன் தொடர்புடைய வர்த்தக மாற்றுவீதம் (Terms of trade) என்பதனால் கருதப் படுவது ***யாது?*** (04 புள்ளிகள்)

(b) (i) "பொருளாதார வளர்ச்சி (Economic Growth) என்பதன் கருத்தை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(ii) பொருளாதார வளர்ச்சியின் மூன்று (03) நன்மைகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## <u>பகுதி C</u>

ஒரு கட்டாய வினா

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 06

(A) வியாபார உலகிலே, மேலெழுகின்ற (emerge) பல்வகைச் சந்தைக் கட்டமைப்புகளுக்கிணங்க, நிறுவனங்கள் வேறுபட்ட சந்தைச் சூழ்நிலைகளின் கீழ் தொழிற்படுகின்றன. ஒவ்வொன்றும் தம்மை ஏனைய கட்டமைப்புகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டக்கூடிய குறிப்பிட்ட சில பண்பியல்புகளைக் (certain characteristics) கொண்டதான பல சந்தைக் கட்டமைப்புகள் காணப்படுகின்றன.

பொருளாதாரமொன்றின் அடிப்படை சந்தைக் கட்டமைப்புகளாக, நிறைபோட்டி, தனியுரிமை, தனியுரிமையான போட்டி மற்றும் சிலருரிமை ஆகிய நான்கினைக் காண முடியும்.

(a) தனியுரிமையின் ஐந்து (05) பிரதான பண்பியல்புகளைக் **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(b) குறுங்கால ஓட்டத்தில் தனியுரிமை நிறுவனமொன்று எவ்வாறு தனது இலாபத்தை உச்சப் படுத்துகிறது என்பதை வரைபடமொன்றின் (graph) துணையுடன் **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(B) (a) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மற்றும் மொத்தத் தேசிய உற்பத்தி (GNP) ஆகியவற்றுக் கிடையேயுள்ள வேறுபாட்டை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) பொருளாதாரமொன்றின் ஆண்டொன்றிற்கான தேசிய கணக்குகளுடன் (national accounts) தொடர்புடைய உத்தேசத் தரவுகளை (hypothetical data) கீழே தரப்பட்டுள்ள அட்டவணை காட்டுகிறது.

| | | **மில்லியன் ரூபா** |
|---|---|---|
| (1) | தொழில் வருமானம் | 360,000 |
| (2) | வாடகை வருமானம் | 220,500 |
| (3) | சுயதொழில் வருமானம் | 190,500 |
| (4) | வியாபாரத் துறையினால் ஈட்டப்பட்ட இலாபம் | 210,600 |
| (5) | வட்டி வருமானம் | 162,000 |
| (6) | மூலதனத் தேய்மானம் | 130,600 |
| (7) | மானியங்கள் | 100,500 |
| (8) | நேரில் வரிகள் | 120,300 |
| (9) | வெளிநாட்டிலிருந்து தேறிய காரணி வருமானம் | (94,000) |

சந்தை விலையில் மொத்த தேசிய உற்பத்தியைக் (GNP) **கணிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |